30th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் தவறுகள் ஏற்படுவதற்கில்லை. தங்கத்தை வாங்கிக்கொண்டு, உடனடியாக மதிப்பிட்டு பணம் கொடுப்பது என்பது இல்லை. யார் தங்கம் கொடுத்தார்கள், எங்கு கொடுத்தார்கள் முதலியவைகளையெல்லாம் பரிசீலனை செய்து தான் தங்கப் பத்திரம் வழங்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: தங்கப் பத்திரங்களுக்கு, திருப்பித் தரும்பொழுது தங்கம் கொடுக்கப்படுமா அல்லது பணமாகக் கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உயர்ந்தத் தங்கமாகக் கொடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த அறிக்கையை பார்க்கும் பொழுது தமிழ் நாட்டில் இருக்கிற தங்கத்தின் அளவுக்குப் பொருத்தமானதாக இதிலே உத்திரவாதம் தரப்பட்டதாகத் தெரியவில்லை. ஏராளமான கள்ளத் தங்கம் இருக்கிறது. கள்ளத் தங்கத்தை கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த சர்க்காரும், மத்திய சர்க்காரும் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கனம் அங்கத்தினரிடம் ஏதாவது தகவல் இருந்தால் அதையும் கொடுத்தால், மேற்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

** 536 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் தங்கப்பத்திரத்தில் முதலீடு செய்யும் தங்கத்தை சென்னையிலேயே மதிப்பிடுவதற்கான வசதி செய்யும்படி மத்திய சர்க்காரிடம் கேட்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், என்ன பதில் கிடைத்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) There are only two Government Mints in the Country handling this work. The Government of India have therefore stated that they cannot arrange assays in each State, since they do not propose to go to private agencies for this work.

* 537 *Q.*—SRI V. SANKARAN: SRI K. CHEEMAICHAMY: } Will the Hon. the Chief Minister be pleased to state the total quantity of gold invested by the Temples, Churches and Mosques respectively in the State for Gold Bond?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: According to the information furnished by the District Collectors, 1,49,348 grammes